**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.
Prosecution witness for P.W.30.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.கல்வி அரசன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.06.2025.

A4 absent. 317 Crpc petition filed. A6 died. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பசுவந்தனை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு ஒட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியில் இருந்தபோது 30.12.2019 அன்று நிலைய குற்ற எண் 154/2019 இதச 147, 148, 294(பி), 341, 302 பிரிவுகள் படியான வழக்கு சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் உத்தரவுப்படி 18.45 மணியளவில் பெற்று பசுவந்தனை காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு ஒட்டப்பிடாரம் காவல்நிலையம் அவர்களிடம் ஒப்படைத்தேன். பிறகு புலன் விசாரணைக்கும், பிரேத விசாரணைக்கும் ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். பின்பு இந்த வழக்கில் இறந்துபோன மாரியப்பன் என்பவரின் பிரேதத்தை காவல் ஆய்வாளரிடமிருந்து பெற்று வேண்டுகோள் கடிதத்துடன் காலை 06.45 மணியளவில் பெற்று தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்தையும் மருத்துவரிடம் கொடுத்தேன். அதற்கு மருத்துவர் P.M.No.888/2019 படி உடற்கூராய்வு

செய்து என்னிடம் பிரேதத்தை ஒப்படைத்தார். பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை சமயத்தில் பிரேதத்தில் இருந்த ரத்தக்கறையுடன் கூடிய வெள்ளை நிற கிழிந்த சட்டை மற்றும் ரத்தக்கறையுடன் கூடிய இரண்டு துண்டுகளாக இருந்த வெள்ளைநிற வேஷ்டி ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்ததை ஒட்டப்பிடாரம் பொறுப்புகாவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். மேற்படி அலுவல் சம்பந்தமாக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு **அ.சா.ஆ 23**. பின்னர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்களை விளாத்திகுளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் PRNo.8/2020, 9/2020, 10/2020, 11/2020, 12/2020 நாள் 31.01.2020 படி நீதிமன்றத்தில் இருந்த மேற்படி சொத்துக்களை மூடி முத்திரையிடப்பட்ட அட்டை பெட்டியில் பெற்று வேண்டுகோள் கடிதம் பெற்று மேலும் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட மாதிரி ரத்தம் ஆகியவற்றை பெற்று வேண்டுகோள் கடிதத்துடன் திருநெல்வேலி வட்டார தடயவில் ஆய்வகத்தில் 03.02.2020 அன்று ஒப்படைத்தேன். பின் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.06.24 19:42:14 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.